ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் வைபவம்

(ஸ்ரீ உ.வே. கோமடம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, வைகுண்டவாஸீ)

## ஏகாதசியன்று அன்னம் கொடுத்துப் பரீக்ஷித்தல்

**ஒரு ஏகாதசி தினத்தில் ஸ்வாமி, ஸ்ரீரங்கநாதனை மங்களாசாஸனம் செய்துவிட்டுநிற்கையில் சில அஸூயாளுக்களின் தூண்டுதலினால் அர்ச்சகன் ஸ்வாமியின் கையில் முத்காந்நத்தை ப்ரஸாதமாகக் கொடுக்க, ஸ்வாமியும் அதைத் தம் திருக்கைகளில் வாங்கி வைத்துக்கொண்டு, ஸ்ரீரங்கநாதனை நோக்கி, "அடியேனை இப்படிச் சோதிக்கலாமா? தேவரீர் அன்று ஓலைப்புறம் இட்டதையே அடியேன் ப்ரமாணமாக அவலம்பித்துப் போருகிறேன். இன்று உபவாஸம் இருக்கவேண்டுமே? இவ்வந்நத்தை என் செய்யட்டும்?" என்று விண்ணப்பம் செய்ய, ஸ்ரீரங்கநாதனும் மற்றொரு அர்ச்சகனிடத்தில் அநுப்ரவேசித்து, "பிள்ளாய்! இது நம்முடைய ஆஜ்ஞையல்ல, ஏகாதசியன்று அந்நம் ஒருகாலும் புஜிக்கத்தக்கதல்ல" என்று நியமித்தருளினார். ஸ்வாமியின் ப்ரபாவத்தைக் கண்டு அர்ச்சகாதிகள் அபசார க்ஷமாபணம் பண்ணிக்கொண்டார்கள். இப்படி ப்ரஸக்தமானவாறே ஏகாதசி விஷயமான இன்னும் சில அம்சங்களை எடுத்துக்காட்டுகிற ஸ்ரீ ஹரிதின திலகம் (96) என்னும் ஒரு க்ரந்தத்தை அருளிச்செய்தார்.**

## உஞ்சவ்ருத்தி தண்டுலத்தில் த்ரவ்யம் ஸமர்ப்பித்தல்

தம்முடைய சிஷ்யர்களினால் ஸமர்ப்பிக்கப்படும் த்ரவ்யங்களைக் கொண்டு க்ருஹ க்ருத்யங்களை நடத்திக்கொண்டுவந்தார். சில சிஷ்யர்கள் ஸ்வாமி தினந்தோறும் ஏன் எழுந்தருளவேண்டும்? தண்டுலத்துடன் சேர்த்து த்ரவ்யத்தையும் ஸமர்ப்பிப்போம் என்று தீர்மானித்து அப்படியே செய்ய, ஸ்வாமியின் நியமனத்தினால் அவற்றைப் பொறுக்கி ஸ்வாமியின் தேவிகளும் வாசலில் குப்பையுடன் சேர்த்துக் கொட்டிவிட்டார்.

## ஸத்யாகாலம் எழுந்தருளுதல்

இப்படி க்ரந்த முகத்தினாலும் ஸம்ப்ரதாயத்தைப் பரவச்செய்துகொண்டு ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருக்கும் காலத்தில் ஒரு நாள் ஸ்வாமி திண்ணையில் உட்கார்ந்து ஒரு அர்த்தவிசேஷத்தில் அழ்ந்திருக்கையில், கந்தாடை லக்ஷ்மணாசார்யர் என்னும் ஒரு ஆசார்யபுருஷன் தம்முடைய

சிஷ்யர்களுடன் அந்த வீதி வழியாகச் சென்றுகொண்டிருந்தார். அவர் சிஷ்யர்களில் ஒருவர் ஸ்வாமியின் ப்ரபாவத்தை அறியாமல் தன் ஆசார்யனை அவமதித்ததாக **எண்ணி, ஸ்வாமியின் திருவடிகளைப் பிடித்து இழுத்துவிட்டுச் சென்றார். ஸ்வாமியும் திடுக்கிட்டு எழுந்து, காரணத்தை அறிந்து, மிகவும் வ்யஸனப்பட்டு, இப்படி வீணாக பாகவதாபசாரம் நேராமல் இருப்பதற்காகக் கொஞ்சம் ஏகாந்தமான ஸ்தலத்தில் வஸிக்கத் திருவுள்ளம் பற்றி, ஸ்ரீரங்கத்தில் நின்றும் புறப்பட்டு ஸத்யாகாலத்திற்குச் சென்று அங்கே சிரகாலம் வஸித்துவந்தார். இந்த வ்ருத்தாந்தம் ஸ்வாமிக்கும் திருவடிகளைப் பிடித்து இழுத்தவருக்கும் தவிர வேறு ஒருவருக்கும் தெரியாது. கொஞ்ச காலத்திற்கெல்லாம் லக்ஷ்மணாசார்யருக்கு திடீரென்று தேஹத்தில் ஒரு வைவர்ண்யம் உண்டாயிற்று. எவ்வளவோ ஸிகித்ஸை பண்ணியும் வ்யாதி சாந்தி அடையாமல் நாளுக்கு நாள் வ்ருத்தியடைவதைப் பார்த்து, லக்ஷ்மணாசார்யரும் இது ஏதோ பாகவதாபசாரத்தின் கார்யமன்றி வேறல்ல என்று நிச்சயித்துப் பலபடிகளாலும் விசாரிக்க, முன் நடந்த வ்ருத்தாந்தத்தை அறிந்து, அந்தச் சிஷ்யனுடன் தம்முடைய பத்நியையும் அழைத்துக்கொண்டு ஸ்வாமியினிடத்தில் அபராத க்ஷமாபணம் செய்துகொண்டு, ஸ்ரீபாத தீர்த்தம் சேர்த்துக்கொண்டார். அதன் மஹிமையினால் அவருக்கு வ்யாதி முற்றிலும் நீங்கிக் கொஞ்ச காலத்திற்கெல்லாம் ஒரு புத்ரன் பிறக்க, அக்குழந்தைக்குத் தீர்த்தப்பிள்ளை என்று திருநாமமிட்டார். லக்ஷ்மணாசார்யருடைய ப்ரார்த்தனைக்கு இணங்கி ஸ்வாமியும் ஸ்ரீரங்கம் எழுந்தருளி முன்போல் ஸித்தாந்த ப்ரவசனம் செய்துவந்தார்.**

## ஸ்ரீரங்கத்தில் துருஷ்கர்களின் உபத்ரவம்

இப்படி ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருக்கும்பொழுது ஒரு நாள் திடீரென்று துலுக்கர்கள் படையெடுத்துவருவதைக் கேள்விப்பட்டு, கோவில் அதிகாரிகளுடன் கலந்து யோசித்து, ஸ்ரீரங்கநாதனை ஏகாந்தமாக வெளியே எழுந்தருளப் பண்ணிக்கொண்டு போகும்படிச் சில அந்தரங்க கைங்கர்யபரர்களை நியமித்து, ஸந்நிதிக் கதவை மூடிக் கல்சுவர் வைத்து மறைத்து, அதற்கு வெளியில் ஒரு விக்ரஹத்தை எழுந்தருளப்பண்ணி, துலுக்கர்களுக்கு ஸந்தேஹம் வாராமல் இருப்பதற்காக அதற்கு முன் கும்பலாய் நின்று ஸேவித்துக்கொண்டிருந்தார்கள். இதற்குள் துலுக்க ஸைந்யமும் ஸந்நிதிக்குள் ப்ரவேசித்து, அங்கு இருந்தவர்களை ஹிம்ஸித்து, அனேகம் த்ரவ்யங்களை அபஹரித்துக்கொண்டு போயிற்று.

ஸ்ரீ ச்ருத ப்ரகாசிகாசார்யர் ஹிம்ஸை பொறுக்கமுடியாமல் ப்ராணனை விட்டார். ப்ராணன் போவதற்கு முன்பு அருகில் இருந்த ஸ்வாமியிடம் தம்முடைய திருக்குமாரர்கள் இருவரையும் ஒப்புவித்து அவர்களைக் காப்பாற்றும்படிக்கும், தாம் அம்மாள் காலக்ஷேபத்தில் கேட்டிருந்த ஸ்ரீபாஷ்யார்த்தங்களை எழுதிவைத்திருந்த குறிப்புகளைக் கொடுத்து, அவற்றைப் பரிசோதித்து ப்ரவசனம் செய்யும்படிக்கும் கேட்டுக்கொண்டார். ஸ்வாமியும் அதை அங்கீகரித்து, சிஷ்யர்களைக் கூப்பிட்டருளி,

அவரவர்கள் தனித்தனியே தப்பியோடி ஸத்யாகாலம் வந்துசேரும்படி நியமித்துத் தாமும் இரவோடு இரவாய் ப்ரயாணம் செய்து அவ்விடம் போய்ச்சேர்ந்தார்.

## திருநாராயணபுர வாஸம்

**ஸ்வாமியினுடைய சிஷ்யர்களும் ஒவ்வொருவராய்த் தப்பித்துக்கொண்டு ஸத்யாகாலம் வந்து சேர, அங்கே கொஞ்ச காலம் எழுந்தருளியிருந்துவிட்டுத் திருநாராயணபுரம் சென்று, தம்மிடத்தில் ந்யஸ்தமான ச்ருதப்ரகாசிகையைச் சோதித்துத் தம்முடைய சிஷ்யர்களுக்கு ப்ரவசனம் செய்துவந்தார். ஸ்ரீரங்கநாதனுடைய பிரிவாற்றாமையைப் பொறுக்கமுடியாமல் துலுக்கர் உபத்ரவம் நீங்கி மறுபடியும் பெருமாளை ஸேவிக்கும்படியான பாக்யம் சீக்ரம் உண்டாகவேண்டும் என்று அபீதி ஸ்தவம்** (101) **என்னும் ஒரு ஸ்தோத்ரத்தை அருளிச்செய்து, அதை ப்ரதி தினமும் அனுஸந்தித்துக்கொண்டுவந்தார். இப்படி ஸம்ப்ரதாய ப்ரவசனம் செய்துகொண்டு எழுந்தருளியிருக்கும் காலத்தில் ஒரு நாள் வழக்கம் போல் எம்பெருமானாரை மங்களாசாஸனம் செய்யும்பொழுது, அவர் தூப்புல் நயினாருக்கு அருளப்பாடு இட்டு அருளி, தீர்த்தம், ஸ்ரீசடாரி, திருமாலை முதலியவைகளை ப்ரஸாதித்து, ஸ்வாமிக்குப் பிறகு ஸம்ப்ரதாய ப்ரவசனம் செய்யக்கடவீர் என்று அனுக்ரஹித்து அருளினார். ச்ருத ப்ரகாசிகாசார்யருடைய திருக்குமாரர்களுக்கு யுக்தமான வயது வந்தவாறே ஸ்வாமி தாமே உபநயனம் செய்து வைத்தருளி சாஸ்த்ர உபதேசாதிகளையும் செய்தருளினார்.**

## "ராமாநுஜ தயாபாத்ரம்" தனியன் அவதாரம்

ராமாநுஜ தயாபாத்ரம் ஜ்ஞாந வைராக்ய பூஷணம் |
ஸ்ரீமத் வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்ததேசிகம் ||

இப்படி இங்கே எழுந்தருளியிருக்கும் காலத்தில் ஆழ்வார் நியமனத்தைத் தலைக்கட்டுவதற்காகத் தாம் அருளிய ஸ்ரீநிகம பரிமளம் என்னும் வ்யாக்யானத்தை ஒரு திருவிசாகத்தன்று ப்ரவசனம் செய்தருள ஆரம்பித்த காலத்தில் ஸ்ரீபேரருளாள ஜீயர் வராமலிருக்க, ஸ்வாமியும் அவரைக் கூப்பிட்டு அனுப்பி, ஏன் வரவில்லை என்று கேட்டருள, அவரும் "இதுவரையில் அடியேன் ஸகல க்ரந்தங்களையும் ஸ்வாமியினுடைய திருக்குமாரருடன் க்ரஹித்தபடியினால் ஸாதீர்த்யம் ஏற்பட்டிருக்கிறது, அடியேனுக்கு அவரிடத்திலே சிஷ்யத்வமும் உத்தேச்யமாகையினால் இந்த க்ரந்தத்தை அவரிடம் இருந்து க்ரஹிக்கவேண்டுமென்கிற ஆசை இருக்கிறது" என்று தெரிவிக்க, ஸ்வாமியும் அவருடைய **ஆசார்யபக்தியை மெச்சி, அப்படியே ஆகட்டும் என்று நியமித்து அருளினார்.**

நயினாரும் பகவத்விஷயத்தை யதா க்ரமம் காலக்ஷேபம் செய்தருளிச் சாற்றுமுறை செய்துவிட்டு, ஸ்வாமியின் நியமனத்தை முன்னிட்டுப் பேரருளாள ஜீயருக்கு பகவத்விஷயத்தை நிகமபரிமள வ்யாக்யானத்துடன் ப்ரவசனம் செய்யும்பொழுது ஜீயரும் ஸ்ரீ நயினாராசார்யர் விஷயமாக,

ஸ்ரீமல் லக்ஷ்மண யோகீந்த்ர ஸித்தாந்த விஜயத்வஜம் ।
விச்வாமித்ர குலோத்பூதம் வரதார்யமஹம் பஜே ॥

என்ற தனியனை விண்ணப்பம் செய்தார்.

பிறகு யதா க்ரமம் காலக்ஷேபம் நடந்துகொண்டிருக்கையில் ஸ்வாமியினுடைய வ்யாக்யான பங்க்திகளின் அர்த்தபுஷ்டியிலும் பூர்வாசார்யர்களின் திருவுள்ளத்தை வெளியிடும் குசலதையிலும் ஈடுபட்டு ஜீயர், ஸ்வாமியின் விஷயமாக ராமானுஜ தயாபாத்ரம் என்ற தனியனை விண்ணப்பம் செய்தார். இத்தனியன் அவதரித்த தினம் கலி 4440 பஹுதான்ய வருஷம் ஆவணி மாதம் ஹஸ்த நக்ஷத்ரம் கூடிய சுபதினம்.

## தனியன்களின் விபாகம்

அன்று காலக்ஷேபம் முடிந்தவுடனே நயினாரும் மற்றவர்களும் ஸ்வாமியிடம் சென்று இதை விண்ணப்பம் செய்துகொண்டார்கள். இதின் அர்த்தபுஷ்டியைக் கணிசித்து ஸ்வாமியும் போர உகந்தருளி, முன்பு நயினார் விண்ணப்பம் செய்த தனியன் அவதார வைலக்ஷண்யத்தின் பெருமையைக் காட்டுகிறது என்றும், ஸ்ரீ பிள்ளை லோகாசார்யர் விண்ணப்பம் செய்த தனியன் ஸ்ரீஸூக்திகளின் பெருமையை வெளியிடுகிறது என்றும், இது எம்பெருமான் தொடக்கமான ஆசார்யர்களின் அனுக்ரஹ விசேஷத்தினை வெளியிடுகிறது என்றும் அனுஸந்தித்து, இவைகளின் அவதரண ஸந்தர்ப்பங்களை உத்தேசித்து, "ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய" என்னும் தனியனை ஸம்ஸ்க்ருத க்ரந்தங்களுக்கு முன்பும், "ராமானுஜ தயாபாத்ரம்" என்னும் தனியனை பகவத்விஷய காலக்ஷேப காலங்களுக்கு முன்பும், "சீரொன்று தூப்புல்" என்று ஆரம்பிக்கும் தனியனைத் தம்முடைய த்ரமிட மணிப்ரவாள ஸ்ரீஸூக்திகளுக்கு முன்பும் அனுஸந்திக்கவேண்டும் என்று நியமித்தருளினார்.

## கொப்பணார்யனை நியமித்தருளுதல்

இப்படி இங்கே எழுந்தருளியிருக்கும் காலத்தில் ஆராதன காரிகை (102), யக்ஞோபவீத ப்ரதிஷ்டை (103), பூகோள நிர்ணயம் (104), பூகோள நிர்ணய வ்யாக்யானம் (105), திருமந்திரச் சுருக்கு (106), துயச் சுருக்கு (107), சரமச்லோகச் சுருக்கு (108) என்னும் க்ரந்தங்களை அருளிச்செய்தார். ஸ்வாமியின் ப்ரபாவாதிசயத்தைக் கேட்டு ஸ்வாமியைத் தண்டன் ஸமர்ப்பித்துப்

**போவதற்காகக் கொப்பணார்யன் எனும் செஞ்சி சிற்றரசன் வந்தான். ஸ்வாமியும் அவனை அனுக்ரஹித்து, அப்பொழுது துலுக்கர்களின் பலம் க்ஷீணித்திருந்தமையினால் ஸ்ரீரங்கநாதனை மறுபடியும் ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளப்பண்ணுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்படி நியமிக்க, அவனும் அப்படியே ஒப்புக்கொண்டு போனான்.**

## திருவரங்கத்தில் திருப்ரதிஷ்டை

**இப்படி ஸ்வாமியினால் நியமிக்கப்பட்ட கொப்பணார்யனும் தன்னுடைய ஸேனையுடன் திருமலை சென்று, அங்கே எழுந்தருளியிருந்த ஸ்ரீரங்கநாதனை ஸகல மர்யாதைகளுடன் தன்னுடைய பட்டணமான செஞ்சிக்கு எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வந்து, அங்கே கொஞ்ச காலம் ஆராதித்து, பிறகு ஸ்ரீரங்கம் அடைந்து, அங்கே காவலாய் இருந்த ஸ்வல்பமான துலுக்க ஸைந்யத்தை நிரஸித்து, ஸ்ரீரங்கநாதனை முன்போல் எழுந்தருளப்பண்ணி, இந்த நல்ல ஸமாசாரத்தை ஸ்வாமிக்குத் தெரிவிக்க, ஸ்வாமியும் மிகுந்த ஸந்தோஷத்துடன் ஸ்ரீரங்கம் எழுந்தருள, அவனும் ஸ்வாமியை முன்னிட்டு யதா சாஸ்த்ரம் திருப்ரதிஷ்டையை நடத்திவைத்தான். இந்த வ்ருத்தாந்தம் ஸ்வாமியின் அவதார ஸமாபனத்திற்குப் பிறகு ஸ்வாமியின் சிஷ்யரும் ஸ்ரீ ச்ருதப்ரகாசிகாசார்யரின் திருக்குமாரருமான பட்டரால் கோயில் திருமதிளில் கல்வெட்டாக வெட்டப்பட்டிருக்கிறது. அப்படி வெட்டிய வருஷத்தை முதலிலேயே சேர்த்து வெட்டப்பட்டிருக்கிறது.**

## திருவத்யயன உத்ஸவத்தை நடத்திவைத்தல்

இப்படி ஸ்ரீரங்கநாதனுடைய திருப்ரதிஷ்டை ஆனதும், ஸ்வாமி முன்போல் ஸம்ப்ரதாய ப்ரவசனம் செய்துகொண்டிருக்கையில் திருவத்யயன உத்ஸவம் வர, நடுவில் சில வருஷங்களாய் அது நடைபெறாமையினாலே சில வாதிகள் ஒன்றுசேர்ந்து, "இது பகவானுடைய உத்ஸவமல்ல, பல ஜாதிகளில் பிறந்த ஆழ்வாராதிகளின் அர்ச்சை, ப்ரதிஷ்டை, ஆராதனம் முதலியவைகள் அசாஸ்த்ரீயமானவை" என்று ஆக்ஷேபிக்க, ஸ்வாமி அவர்களை வாதத்தில் நிரஸித்து, ஸ்ரீ சததூஷணீயில் நிரூபித்தருளிய ஸமாதானத்தை எடுத்துக்காட்டி உத்ஸவம் அவச்யம் நடைபெறவேண்டும் என்று ஸ்தாபித்து அருளினார். இப்படி அடிக்கடி உபத்ரவம் வருவதைக் கடாக்ஷித்து, இனி ப்ரதிவாதிகளினால் தடங்கல் ஏற்பட்டால் ஆராதனாதிகளை நிறுத்தக்கூடாது என்று ஆஜ்ஞாரூபமான உத்தரவு பிறப்பித்து, அதைக் கல்வெட்டில் வெட்டிவைக்கும்படி ஏற்பாடு செய்தருளினார். மேல் யதா க்ரமம் உத்ஸவம் நடக்கும்போது ஆழ்வார் ஆசார்யர்கள் ஸ்ரீரங்கநாதன் திருமுன்பே ஒரு திருவோலக்கமாக எழுந்தருளப்பட்டு, அவர்களுக்கும் பிறகு கோஷ்டிக்கும் ஸ்ரீசடாரி மர்யாதையாகி திருப்பல்லாண்டு தொடங்குவதற்காக ஸ்வாமி வழக்கம் போல "ஸாதித்தருள" என்று ப்ரார்த்தித்து "லக்ஷ்மீநாத ஸமாரம்பாம்" என்று உபக்ரமிக்க,

ஸ்ரீரங்கநாதன் அர்ச்சகமுகேந "இந்த உத்ஸவம் இப்பொழுது நடப்பதற்கு ப்ரதான காரணமாய், ஆழ்வார்களினுடைய அவதார வைலக்ஷண்யத்தையும், அவர்கள் ப்ரத்யக்ஷீகரித்து வெளியிட்டருளிய சந்தமிகு தமிழ்மறைகளின் அர்த்த விசேஷங்களையும் நிகம பரிமளம் முதலிய ஸ்ரீஸூக்திகளினால் பரவச்செய்தவருமான ஸ்வாமியின் ப்ரபாவத்தை வெளியிடுகிற "ராமானுஜ தயாபாத்ரம்" என்று ஆரம்பிக்கும் தனியனை முதன்முதலில் அனுஸந்திக்கவேண்டும்" என்று நியமித்தருளினான். இத்தைப் பின்பற்றியே மற்ற எல்லா திவ்யதேசங்களிலும் நடத்திவந்தார்கள். கால வைபரீத்யத்தினால் இதற்கு இக்காலத்தில் மாறுதல்கள் காணப்பட்ட போதிலும் அந்த நியமனத்தைத் தலைக்கட்டி வரும் திவ்யதேசங்களைக் காண்கிறோம். இந்த ஸந்தர்ப்பத்தில் ஆழ்வார்களின் திருவவதாரத் திருநாள், ஊர், திங்கள் முதலியவைகளைக் குறிப்பிடுகிற ப்ரபந்த ஸாரம் (109) என்கிற ப்ரபந்தத்தை அருளிச்செய்தார்.

## திருச்சித்ரகூடத்தில் திருப்ரதிஷ்டை

தில்லையாருடைய நிர்பந்தத்தினால் சில காலமாகத் திருவாராதனாதிகள் இல்லாமலிருந்த ஸ்ரீகோவிந்தராஜனுக்குத் திருப்ரதிஷ்டைகளைக் கொப்பணார்யனைக் கொண்டு நடத்திவைத்தருளினார்.

## வித்யாரண்ய - அக்ஷோப்யமுனி ஸம்வாத மத்யஸ்தம்

இப்படி ஸ்வாமி ஸ்ரீரங்கத்தில் விசேஷ மஹிமையுடன் எழுந்தருளியிருக்கும் பொழுது, விஜயநகர ஸமஸ்தானத்தில் ப்ராதானராக இருந்த வித்யாரண்யருக்கும் த்வைத மத ப்ரபல வித்வானாகிய அக்ஷோப்யமுனிக்கும் மத ஸம்பந்தமான விவாதம் உண்டாகி, அவ்விஷயத்தில் ஜய அபஜயத்தை நிர்ணயிக்கச் சரியான மத்யஸ்தர்கள் அகப்படாமல், அவர்கள் தங்களுடைய கக்ஷிகளை எழுதி ஸ்வாமியினிடம் அனுப்ப, ஸ்வாமியும் அவைகளைப் பராமர்சித்து, அக்ஷோப்யமுனி பக்ஷத்தில் ஜயம் என்பதைத் தெரிவித்தார். இந்த வ்ருத்தாந்தம் ப்ருஹஜ்ஜயதீர்த்த விஜயத்தில், ஐந்தாவது அத்யாயத்தில், இருபத்துமூன்றாம் ச்லோகத்தில் கூறப்பட்டிருக்கிறது. இந்த விஜயத்தின் ஜ்ஞாபகார்த்தமாக மைஸூர் ராஜ்யத்தில் முல்பாகல் என்னும் ஊருக்கு அருகாமையில் ஒரு ஸ்தம்பம் நாட்டப்பட்டு, அதில் ஸ்வாமியின் ச்லோகம் வெட்டப்பட்டிருந்தது என்றும், இப்பொழுது அந்த வெட்டு மறைந்துபோய் ஸ்தம்பத்தில் ஒரு பாகமே இருக்கிறதென்றும் தெரியவருகிறது.

வித்யாரண்யரும் ஸ்வாமியின் ஸ்ரீசததூஷணீயை முற்றிலும் பராமர்சித்து ஒரு சகாரம் நிஷ்ப்ரயோஜனமாய் ப்ரயோகப்பட்டிருப்பதாக ஸங்கித்து, அதை ஸ்வாமிக்குத் தெரிவிக்க, ஸ்வாமியும் அதின் ஸப்ரயோஜநத்வத்தைச் சகார ஸமர்த்தனம் (110) என்னும் ஒரு க்ரந்தத்தில் நிரூபித்தருளி, அதை வித்யாரண்யருக்குக் கொடுத்தனுப்ப, அவரும் அதைப் பார்த்துத் தாம் ஸங்கித்தது யுக்தமல்ல என்று அறிந்து, ஸ்வாமியின் சக்தி அதிசயத்தில் முன்போல் ஈடுபட்டிருந்தார்.

நன்றி: ஸ்ரீ உ.வே. கோமடம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி ஸ்வாமி வெளியிட்ட சந்தமிகு தமிழ்மறை.

****************



**சந்தமிகு தமிழ்மறையோன் தூப்புல் தோன்றும் வேதாந்தகுரு**

**தொடரும். . .**